அறிக்கை அளிக்கக்கூடியது

இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண் 459/2016

கவிதா சந்த்ரகாந்த் லகானி .....மேல்முறையீட்டாளர்(கள்)

எதிர்

மகாராஷ்டிர மாநில அரசு மற்றும் ஒருவர் .....எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர்.கே.அகர்வால்:

1) இங்குள்ள 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால், ஆ.ப.வ. எண் 215/பி.டபிள்யூ/2005-இல் மும்பை, குர் காவ், 40-ஆவது நீதிமன்ற கற்றறிந்த கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நடுவரின் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பமானது நிராகரிக்கப்பட்டு, அதில் கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நடுவரால் பிறப்பிக்கப்பட்ட, 03.10.2006-ஆம் தேதியிடப்பட்ட மேல்விசாரணைக்கான உத்தரவை எதிர்த்து, இங்குள்ள 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் சீராய்வு விண்ணப்ப எண் 1261/2007-இல் அமர்வு நீதிமன்ற அறிவார்ந்த நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட, 04.07.2007-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவை எதிர்த்து, இங்குள்ள மேல்முறையீட்டாளரான கவிதா சந்த்ரகாந்த் லகானியால் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் நீதிப்பேராணை மனு எண் 3766/2012-இல் உயர் நீதிமன்றம் மனுவைத் தள்ளுபடி செய்து, அறிவார்ந்த தனியமர் நீதியரசர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட, 06.05.2013-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவை எதிர்த்து, 1860-ஆம் ஆண்டைய இந்திய தண்டனைச் சட்டம் (சுருக்கமாக 'இ.த.ச.') பிரிவு 363-இன் கீழ் தன்னை விடுவிக்கவேண்டி, இம்மேல்முறையீடானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அமர்வு நீதிமன்ற

கற்றறிந்த நீதிபதி, 04.07.2007-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம், 2-ஆம் எதிர்மேல் முறையீட்டாளரை, இ.த.ச., பிரிவு 366-இன் கீழான குற்றத்தினின்று மட்டுமல்ல, இ.த.ச., பிரிவுகள் 363 மற்றும் 506(ii)-இன் கீழானவற்றினின்றும் விடுவித்தார் என்பதைக் குறிப்பிடலாம்.

2. பொருண்மைகளின் சுருக்கம்:

(அ) 06.09.2003 விதிவசமான இரவன்று மேல்முறையீட்டாளரும், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரும், தங்களுடைய நண்பர்களுடன் பிறந்தநாள் விழாவிலிருந்தனர் என்றும், விழா முடிந்ததும், மேல்முறையீட்டாளரை இரவு விருந்து நடக்குமிடத்தில் விட்டு விடுவதாகப் போக்குகாட்டி, அவளுடன் முன்னரே உறவு பாராட்டி வந்தவரான 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், அவரை மும்பை கஃபே பரேடிலுள்ள தன்னுடைய வீட்டிற்கு கொண்டுசென்றார். அங்கு சென்றபின்னர், சீருந்திலிருந்து வெளியேவர மேல்முறையீட்டாளர் மறுத்தபொழுது, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், அவரை வலுக்கட்டாயமாக இறக்கி, அவரை தன்னுடைய வீட்டிற்குக் கொண்டு சென்று, அவரை படுக்கையில் கிடத்தினார் என்றும், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், அவரது உடைகளனைத்தையும் களைந்து, தன்னுடைய இடுப்பு வார்ப்பட்டையால் அடிக்கத் துவங்கி, மானபங்கம் செய்யும் நோக்கில் முறையின்றி அவருடைய அந்தரங்க அங்கங்களைத் தொட்டார் என்றும் கூறி, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கெதிராக மும்பை காம்தேவி மாவட்ட காவல்நிலையத்தில் 247/2003 என்ற எண்ணுள்ள 12.09.2003-ஆம் தேதியிடப்பட்ட முதல் தகவலறிக்கை இங்குள்ள மேல்முறையீட்டாளரால் பதிவு செய்யப்பட்டது.

(ஆ) இவ்வழக்கில், இ.த.ச., பிரிவுகள் 363, 342, 324, 354, 323 மற்றும் 506 (பகுதி II) ஆகியவற்றின் கீழ் 30.03.2004 அன்று மும்பை, குர்காவ் கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நடுவர், 40-ஆம் நீதிமன்றத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.இ.த.ச., பிரிவு 363-இன் கீழான குற்றம்

ஏதும் நிறுவப்படவில்லை என்று கூறி, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் விடுவிப்பு விண்ணப்பம் முன்கொணரப்பட்டது.அறிவார்ந்த கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நடுவர், விடுவிப்பு விண்ணப்பத்தை 03.10.2006-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம் நிராகரித்து, அமர்வு நீதிமன்றத்திற்கு மேல்விசாரணைக்கு வழக்கை அனுப்பி, அது அமர்வு வழக்கு எண் 858/2006-ஆக பதியப்பட்டது.

(இ) 03.10.2006-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவால் பாதிப்படைந்து, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் அமர்வு நீதிமன்றம் முன்பாக 1261/2006 என்று எண்ணிடப்பட்ட சீராய்வு விண்ணப்பத்தை தாக்கல் செய்தார். 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், இ.த.ச., பிரிவு 366-இன் கீழ் தன்னை விடுவிக்கவும் மற்றும் வழக்கை கீழமை நீதிமன்றத்திற்கு திருப்பவும் கோரி, அமர்வு வழக்கு எண் 858/2006-இல் பல்வகை விண்ணப்ப எண் 244/2007-ஐயும் தாக்கல் செய்தார், கிரேட்டர் மும்பை, அறிவார்ந்த உதவி அமர்வு நீதிபதி, 2-ஆம் எதிர் மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட 244/2007 என்ற எண்ணுடைய பல்வகை விண்ணப்பத்தை 10.04.2007-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம் நிராகரித்தார்.

(ஈ) 03.10.2006 மற்றும் 10.04.2007-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவு களால் பாதிப்படைந்து, 2-ஆம் திர் மேல்முறையீட்டாளர், உயர் நீதிமன்றத்தின் முன்பாக 1340/2007 என்ற எண்ணுடைய குற்றவியல் விண்ணப்பத்தை தாக்கல் செய்தார்.25.04.2007 அன்று வழக்கானது, உயர் நீதிமன்றத்தின் அறிவார்ந்த தனிய மர் நீதியரசர் முன்பாக விசாரணைக்கு வந்தபொழுது, அமர்வு நீதிமன்றத்தின் முன்பான சீராய்வு விண்ணப்பமானது முடிக்கப்படும்வரையில், வழக்கின் விசாரணையானது நடத்தப்படக்கூடாது என்னும் வேண்டுகோளுடன், 2-ஆம் எதிர் மேல்முறையீட்டாளர் அதைத் திரும்பப்பெற்றார். அச்சீராய்வு விண்ணப்பமானது முடிக்கப்படும்வரையில், உயர் நீதிமன்ற அறிவார்ந்த தனியமர் நீதியரசர், 25.04.2007-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம் நடவடிக்கைகளை நிறுத்திவைத்தார்.

(உ) அறிவார்ந்த கூடுதல் அமர்வு நீதிபதி 2-ஆம் எதிர் மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு விண்ணப்பத்தை அனுமதிக்கும் பொழுது, 03.10.2006-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவை 04.07.2007-ஆம் தேதியிட்ட உத்தரவின்மூலம் நீக்கறவு செய்தார்.அறிவார்ந்த நீதிபதி, 2-ஆம் எதிர்மேல் முறையீட்டாளரை, இ.த.ச., பிரிவு 366-இன் கீழாக மட்டுமல்லாமல், பிரிவு கள் 363 மற்றும் 506(ii)-இன் கீழான குற்றம் தொடர்பாகவும் விடுவித்தார். 13.06.2012 அன்று 2-ம் எதிர் மேல்முறையீட்டாளருக்கெதிராக, இ.த.ச., பிரிவுகள் 342, 324, 323 மற்றும் 354 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டன. 04.07.2007-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவால் பாதிப்படைந்து, மேல்முறையீட்டாளர் உயர் நீதிமன்றத்தின் முன்பாக 3766/2012 என்ற எண்ணுடைய குற்றவியல் நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்தார்.உயர் நீதிமன்றத்தின் அறிவார்ந்த தனியமர் நீதியரசர், மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவை 06.05.2013-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம் தள்ளுபடி செய்தார்.

(ஊ) 06.05.2013-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையால் பாதிப்படைந்து, மேல்முறையீட்டாளர் இந்நீதிமன்றம் முன்பாக இம் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளார்.

3.மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. சித்தார்த் லுத்ரா, 2-ஆம் எதிர்மேல் முறையீட்டாளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. மகேஷ் ஜெத்மலானி மற்றும் எதிர்மேல் முறையீட்டாளரான மாநில அரசுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. நிஷாந்த் ஆர். கட்னேஷ்வர்க்கர் ஆகியோரின் வாதங்கள் கேட்கப்பட்டன.

பரிசீலனைக்குரிய கூறு(கள்):

4. இந்நீதிமன்றத்தின் முன்பான பரிசீலனைக்குரிய ஒரே கூறானது, தற்பொழுதைய வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில்,

இத.ச.,பிரிவு 366-ஐ வனையப்பட்ட குற்றச்சாட்டில் சேர்ப்பதற்கு, மேல்முறையீட்டாளர் வழக்கை நிறுவியுள்ளாரா இல்லையா?என்பதேயாகும்.

5. நாங்கள், இரு தரப்பினரால் முன்கொணரப்பட்ட வாதங்களைக் கேட்டு, ஆவணங்களைப் பார்வையிட்டோம்.

எதிர்வாதங்கள்:

6. சம்பவமானது, 06/07.09.2003 அன்று நிகழ்ந்ததென்றும், மேல்முறையீட்டாளரின் முறையீட்டின் பேரில் 12.09.2003 அன்று மு.த.அ. பதியப்பட்டதென்றும் மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் வாதிட்டார்.மேலும் 16.02.2004 அன்று மேல்முறையீட்டாளர் கூடுதல் வாக்குமூலமளித்தார் என்றும், குற்றமுறையீட்டையும், கூடுதல் வாக்கு மூலத்தையும் அவற்றின் உண்மையான தோற்றத்துடன் எடுத்துக்கொண்டால், 2-ஆம் எதிர்மேல்முறை யீட்டாளரை விடுவிப்பதற்காக, இ.த.ச., பிரிவு கள் 366, 363 மற்றும் 506(ii) ஆகியவற்றின் கீழ் சாட்டுரைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்கு ஏதும் நிறுவப்படவில்லை என்றும் வாதிட்டார்.

7. மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர், தன்னுடைய வாதத்திற்கு ஆதரவாக, கிரஃப் பைனான்ஸ் லிமிடெட் -எதிர்-ஸ்ரீ ஷாந்தி ஹேறாம்ஸ் (பி) லிமிடெட் மற்றும் ஒருவர் 2 (2005) 7 எஸ்.சி.சி. 467:(ஏ.ஐ.ஆர்.2005 எஸ்.சி. 4284) என்ற வழக்கின் தீர்ப்புரையைச் சார்வுற்றார்.ஆகவே, அவர், 2-ஆம் எதிர் மேல்முறையீட்டாளரை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கும் எதிர்ப்புக்குள்ளான உத்தரவும், மேலும் அமர்வு நீதிமன்றத்தின் உத்தரவும் இந்நீதிமன்றத்தால் நீக்கறவு செய்யப்படவேண்டும் என வாதிட்டார்.

8. எனினும், 2-ஆம் எதிர்மேல்முறை யீட்டாளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர், 12.09.2003 அன்று பதிவு செய்யப்பட்ட மு.த.அ.-இன் அடிப்படையிலான குற்றமுறையீட்டில், இ.த.ச., பிரிவுகள் 366, 363 மற்றும்

506(ii) ஆகிய குற்றங்கள் புரிந்ததன் தொடர்பாக எந்தவொரு முணுமுணுப்பு பேச்சுமில்லை என்றும், சுமார் 5(ஐந்து) மாதங்களுக்கு பின்னர், மேல்முறையீட்டாளரால் அளிக்கப்பட்ட கூடுதல் வாக்குமூலமானது, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரை பிற பிரிவுகளின் கீழும் சிக்கவைக்குமொரு பிற்சிந்தனையே என்றும், ஆகவே, அதைச் சார்வுற முடியாதென்றும் அவர் வாதிட்டார்.

9. 2-ஆம் எதிர் மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர், தரம் பால் மற்றும் பலர் -எதிர்-அரியானா மாநில அரசு மற்றும் ஒருவர், (2014) 3 எஸ்.சி.சி. 306:(ஏ.ஐ.ஆர்.2013 எஸ்.சி. 3018) என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவைக் குறிப்பிட்டு, உயர் நீதிமன்றம் மற்றும் அமர்வு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் குறுக்கீடு எதையும் கோரவில்லை எனப் பணிந்துரைத்தார்.

விவாதம்:

10. மேற்படியான பின்னணியில், இ.த.ச., பிரிவு 366-இன் ஆக்கக்கூறுகளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும், அவை கீழ்க்காணுமாறு:

> "366. **ஒரு பெண்ணைத் திருமணம் போன்றவற்றிற்கு கட்டாயப்படுத்தி, கவர்ந்து செல்லல், கடத்துதல் அல்லது தூண்டுதல்**-எந்தப் பெண்ணையேனும், அவரது விருப்பத்திற்கு மாறாக எவரையேனும் மணந்துகொள்ளும்படி கட்டாயப்படுத்தலாம் என்னும் உட்கருத்தோடு அல்லது அநேகமாக அவர் கட்டாயப்படுத்தப்படுவார் என்று அறிந்து அல்லது முறையற்ற உடலுறவு கொள்ளும்படி அவரைப் பலவந்தப்படுத்தலாம் அல்லது வசியப்படுத்தலாம் என்னும் பொருட்டோ அல்லது அவர் அநேகமாகப் பலவந்தப்படுத்தப்படுவார் அல்லது வசியப்படுத்தப்படுவார் என்று அறிந்தோ, கவர்ந்து செல்கிற அல்லது கடத்திச் செல்கிற எவரொருவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை வகைகள் இரண்டில் ஒன்று விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அவரை அபராதத்திற்குள்ளாக்கவும் செய்யலாம்; இன்னொருவருடன் அவர் முறையற்ற உடலுறவு கொள்ளும்படி பலவந்தப்படுத்தப்படலாம் அல்லது வசியப் படுத்தப்படலாம் என்னும்

உட்கருத்துடன் அல்லது அவர் அநேகமாக பலவந்தப்படுத்தப்படுவார் அல்லது வசியப்படுத்தப்படுவார் என்று அறிந்து, இச்சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ள குற்றமுறு மிரட்டல் அல்லது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல் அல்லது வற்புறுத்தும் வேறேதேனும் முறை மூலமாக எந்தப் பெண்ணையேனும் ஓரிடத்திலிருந்து செல்லும்படி தூண்டுகிற எவரொருவரும் மேற்சொன்னவாறு தண்டனைக்குரியவராதல் வேண்டும். "

'ஆட்கடத்துதல்' என்ற குற்றத்தை நிறுவும் பொருட்டு, ஒரு நபர், சட்டவிரோதமாகவோ, வலுக்கட்டாயமாகவோ அல்லது ஏமாற்றியோ கொண்டு செல்லப்படவேண்டும்.அதாவது, ஒரு நபரை, பலவந்தத்தின் அல்லது ஏமாற்றலின்மூலம் ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்கு செல்லத் தூண்டி கட்டாயப்படுத்துவதாகும்.குற்றஞ்சாட்டப்பட்டவரின் எண்ணமே, இப்பிரிவின் கீழான குற்றத்திற்கு அடிப்படையும் மற்றும் குற்றச்சாட்டின் சாரமுமாகும்.குற்றஞ்சாட்டப்பட்டவரின் கயவிருப்பம், உட்கருத்து மற்றும் நடத்தை ஆகியவையே குற்றத்தை தீர்மானிக்கின்றன, அவை, குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒரு பெண்ணை எந்த எண்ணத்துடன் கவர்ந்து சென்றார் அல்லது கடத்தினார் என்பதைத்தான் கொண்டிருக்க வேண்டும் மற்றும் ஒவ்வொரு வழக்கின் தீர்மானத்திற்கான முக்கிய வினாவானது, குற்றஞ்சாட்டப்பட்டவரின் உட்கருத்தேயாகும்.குற்றஞ்சாட்டப்பட்டவரின் தேவையான உட்கருத்தானது நிறுவப்பட்டுவிட்டால், குற்றஞ்சாட்டப்பட்டவர் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதில் வெற்றியடைந்தாலும், இல்லையென்றாலும், பெண், திருமணத்திற்கோ அல்லது முறையற்ற உடலுறவு கொள்வதற்கோ சம்மதித்திருந்தாலும், இல்லையென்றாலும் குற்றம் முழுமையடைகிறது.

11. இதைத் தவிர, இ.த.ச., பிரிவு 366-இன் கீழ் குற்றத்தை நிறுவ, குற்றஞ்சாட்டப்பட்டவர், குற்ற முறையீட்டாளரான பெண்ணை, ஏதேனும் இடத்திலிருந்து செல்வதற்கு தூண்டினார் அல்லது பலவந்தத்தால் கட்டாயப்படுத்தினார் என்றும், அத்தூண்டுதலானது ஏமாற்றுமுறையிலானதென்றும், அத்தகைய கடத்தலானது,

குற்றமுறையீட்டாளர் முறையற்ற உடலுறவு கொள்ள வசியப்படுத்தப்படலாம் என்ற எண்ணத்தில் நிகழ்ந்ததென்றும் மற்றும்/அல்லது குற்றமுறையீட்டாளரை கடத்தியதன் விளைவாக, அவள் முறையற்ற உடலுறவு கொள்ள அநேகமாக வசியப்படுத்தப்படலாம் என்பதை குற்றஞ்சாட்டப்பட்டவர் அறிந்திருந்தார் என்றும் நிரூபிப்பது, அரசுத்தரப்பிற்கு தேவையாகிறது. ஆட்கடத்தலொன்றே, குற்றஞ்சாட்டப்பட்டவரை இக்குற்ற பிரிவின் வரம்பின் கீழ் கொண்டுவருவதில்லை. இ.த.ச., பிரிவு 366-இன் கீழான குற்றச்சாட்டைப் பொறுத்தவரையில், பெண் கடத்தப்பட்டார் என்ற காண்முடிவொன்றே போதுமானதல்ல, ஏதேனும் நபரை மணம் புரிந்துகொள்ள, அவள் கட்டாயப்படுத்தப் படலாம் எனும் உட்கருத்தோடு அல்லது அநேகமாக அவள் கட்டாயப்படுத்தப்படுவாள் என்று அறிந்து அல்லது அவர், முறையற்ற உடலுறவு கொள்ள பலவந்தப்படுத்தலாம் அல்லது வசியப்படுத்தலாம் எனும் பொருட்டோ அல்லது அவர் அநேகமாக உடலுறவிற்கு பலவந்தப்படுத்தப்படுவார் அல்லது வசியப்படுத்தப்படுவார் என்று அறிந்து குற்றம் சாட்டப்பட்டவர் அப்பெண்ணை கடத்தினார் என்பது நிரூபிக்கப்படவேண்டும். ஆட்கடத்தலானது, இ.த.ச., பிரிவு 366-இன் கீழ் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கானது என்பதை அரசுத்தரப்பு நிருபித்தாலன்றி, நீதிமன்றமானது, குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றவாளியாக முடிவு செய்து, இ.த. ச., பிரிவு 366-இன் கீழ் தண்டிக்கமுடியாது.

12. கீழமை நீதிமன்றங்களின் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பங்கள் மற்றும் உத்தரவுகளின் சாரமும் ஒன்றே என்பது எங்களது ஆழ்ந்தாராய்ந்த கருத்தாகும்.அனைத்து கீழமை நீதிமன்றங்களிலும், 2-ஆம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட பிற விண்ணப்பங்கள், இக்கட்டத்தில் இந்நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வில்லை என்பதைப் பரிசீலிப்பதில் பொருளேதுமில்லை.வழக்கின் இப்பார்வையில், தற்பொழுதைய வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில், இ.த.ச., பிரிவு 366-இன் பொருத்தமுடைமை குறித்த விவாதத்திற்கு எங்களை உட்படுத்திக்கொள்வோமானால், அது பொருத்தமானதாக இருக்கும்.

13. கையிலுள்ள வழக்கில், இங்குள்ள மேல்முறையீட்டாளரும், 2-ஆம் எதிர்மேல்முறை-யீட்டாளரும், உறவு பாராட்டி வந்தனர். 06.09.2003 அன்று, இங்குள்ள மேல்முறையீட்டாளரும், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரும், தங்களுடைய நண்பர்களுள் ஒருவரின் பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டனர். குற்றமுறையீட்டிலுள்ள குற்றச்சாட்டுகளின்படி, 07.09.2003 அன்று விடியற்பொழுதில், அனைத்து நண்பர்களும் இரவு விருந்து நடக்குமிடத்திற்கு சென்றபொழுது, இங்குள்ள 2-ஆம் எதிர்மேல் முறையீட்டாளர், மேல்முறையீட்டாளரை விருந்து நடக்குமிடத்தில் விட்டுச்செல்லும் பொருட்டு, மும்பை கஃபே பரேடில் உள்ள தன்னுடைய வீட்டிற்கு கொண்டுசென்று, அவரை சீருந்திலிருந்து இறங்கச் சொன்னார். அதற்கு அவள் மறுத்தபொழுது, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், அவளை வலுக்கட்டாயமாக சீருந்துக்கு வெளியே இழுத்து, அவளை தூக்கி, தன்னுடைய வீட்டிற்கு கொண்டுசென்று, தன்னுடைய படுக்கையில் அவளை கிடத்தினார். இதன்பின்னர், இங்குள்ள 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், "நான் உன்னை காதலிக்கின்றேன், நீ ஏன் என்னை மணக்க மாட்டேன் என்கின்றாய்" எனக் கூறித் தன்னுடைய கைகளாலும், இடுப்பு வார்ப்பட்டையாலும், அவளை அடிக்கத் துவங்கினார். அவர், அவளுடைய தலையைக்கூட, சுவற்றில் இடித்தார். அதன் விளைவாக, அவளது உடலில் காயங்கள் ஏற்பட்டன. இரவு 2.00 மணியளவில், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் தந்தையார் வீடு திரும்பியபொழுது, அவர் இங்குள்ள மேல்முறையீட்டாளரை, அவளுடைய வீட்டிற்கு அழைத்துச்சென்றார். 12.09.2003 அன்று இ.த.ச.வின் பல்வேறு பிரிவுகளின் கீழ் மு.த.அ. பதிவு செய்யப்பட்டது. ஒரு வாரத்திற்கு பின்னர், மேல்முறையீட்டாளரால், தன்னுடைய தாயாரிடம் பொருண்மைகள் விளக்கப்பட்ட பின்னர், அதாவது, 19.09.2003 அன்று மேல்முறை யீட்டாளர், பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டிருக்கின்ற நிகழ்வை நிறுவியுள்ளதாக கூடுதல் வாக்குமூலமளிக்கப்பட்டது. மு.த.அ. சம்பவம் நடந்து ஐந்து நாட்கள் கழித்து பதியப்பட்டதால், "இந்த தர்மசங்கடமான நிலை காரணமாக, முன்பே

கூறவில்லை" என்ற அவருடைய விளக்கமானது, நம்பிக்கையை ஈர்க்கவில்லை, ஆகவே, அவர் இதனை உரியவகையில் ஆராய்ந்தே தாக்கல் செய்தார். மீண்டும் ஒரு வாரத்திற்குள்ளாக, அவர் பாலியல் துன்புறுத்துதல் பற்றி குறிப்பிட எண்ணிய பிறகு, இப்பொழுது மட்டும் ஏன் தர்மசங்கடமான நிலையை உணரவில்லை?அதற்கு விளக்கமேதுமில்லை. 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் சீருந்திலிருந்து, இங்குள்ள மேல்முறையீட்டாளர் வெளியே இழுக்கப்பட்ட செயலானது, காவலாளியால் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.வழக்கின் இக்கண்ணோட்டத்தில், இங்குள்ள 2-ஆம் எதிர் மேல் முறையீட்டாளர், மேல்முறையீட்டாளரை தன்னுடைய வீட்டிற்கு வலு க்கட்டாயமாக கொண்டு சென்றார் என்ற அம்சத்திற்குட்பட்டு குற்றச்சாட்டு உள்ளது என்பது தெள்ளத்தெளிவாகிறது. எனினும், அவளுடைய உடைகள் களையப்பட்டது, முறையின்றி தொடப்பட்டது அல்லது பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியது போன்றவை, பின்னர் சேர்க்கப்பட்டவையாகும்.ஆட்கடத்தலொன்றே, குற்றஞ்சாட்டப்பட்டவரை இ.த.ச., பிரிவு 366-இன் வரம்பிற்குள் கொண்டுவராது என இந்நீதிமன்றம் பன்முறை தீர்ப்பளித்துள்ளது. ஏதேனும் நபரை மணம் புரிந்துகொள்ள, அவள் கட்டாயப்படுத்தப் படலாம் எனும் உட்கருத்தோடு அல்லது அநேகமாக அவள் கட்டாயப்படுத்தப்படுவார் என அறிந்தோ அல்லது முறையற்ற உடலுறவு கொள்ள பலவந்தப்படுத்தப்படலாம் அல்லது வசியப்படுத்தப்படலாம் எனும் பொருட்டோ அல்லது முறையற்ற உடலுறவு கொள்ள அவர் அநேகமாக பலவந்தப்படுத்தப்படுவார் அல்லது வசியப்படுத்தப்படுவார் என அறிந்து, குற்றஞ்சாட்டப்பட்டவர், அப்பெண்ணை கடத்தினார் என்பது நிரூபிக்கப்படவேண்டும். 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரும் மேல்முறையீட்டாளரும், உறவு பாராட்டி வந்தனர் என்பதை அவர்களுடைய குடும்பத்தினர் அறிந்திருந்தனர் என்பது பதிவாவணத்திலிருந்து தெளிவாகிறது.2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், அவளை வலுக்கட்டாயமாக தன்னுடைய வீட்டிற்கு கொண்டுசென்றார் என்பதே முதன்மையான குற்றச்சாட்டுக்களாகும். ஆனால், அவரை முறையற்ற உடலுறவு கொள்ள வசியப்படுத்தும் உட்கருத்துடனல்ல. உண்மையில், வழக்குத்தொடுத்த

பெண்ணின் கூற்றின்படி, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், முதலில் அவரிடம் தனக்குள்ள காதலை வெளிப்படுத்திய பிறகே, தன்னுடைய இடுப்பு வார்ப்பட்டையாலும், கரங்களாலும் அடித்தார் என்ற பொருண்மை பதிவாவணத்திலிருந்து தெளிவாகிறது.2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் பாலியல் துன்புறுத்தலுக்காளாக்கப்பட்டார் என்ற கூற்றானது, உடனடியாக அளிக்கப்படாமல், பின்னரே அளிக்கப்பட்டது. 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் இச்செயல்களே, அவரது விருப்பத்திற்கு மாறாக அவரை மணம் புரியும்பொருட்டோ அல்லது முறையற்ற உடலுறவு கொள்ள அவளை பலவந்தப்படுத்தவோ அல்லது அவளை வசியப்படுத்தவோ அவளை கடத்துவதான அவருடைய (2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருடைய) உட்கருத்தை காண்பிக்கவில்லை.

14) 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், அவளை தன்னுடைய வீட்டிற்கு வலுக்கட்டாயமாக கொண்டு சென்றார் என்பது நிரூபிக்கப்பட்டாலுங்கூட, அவளை மணப்பது அல்லது முறையற்ற உடலுறவு கொள்ள அவளை பலவந்தப்படுத்துவது அல்லது வசியப் படுத்துவதே அவரது உட்கருத்து என்ற பிந்தைய கூற்றானது, பின்யோசனையானது என்பது தெளிவாகிறது.அதிகபட்சமாக, இருவரும் உறவு பாராட்டி வந்தனர் என்றும், திடீர் உணர்ச்சி வெளிப்பாட்டின் காரணமாக அல்லது 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் ஏற்பட்ட பாதுகாப்பற்ற உணர்வின் காரணமாக, மேற்படி செயலானது நிகழ்த்தப்பட்டது என்றும் வழக்கை எடுத்துக் கொள்ளலாம். மேலும், தரப்பினர்களுக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞரால் சார்வுறப்பட்ட தீர்முடிவுகள் தற்பொழுதைய வழக்கின் பொருண்மைகளுக்கு பொருந்தத்தக்கவையல்ல.

15) மேற்படி விவாதத்தைக் கருத்திற்கொண்டு, இ.த.ச., பிரிவு 366-இன் கீழான குற்றச்சாட்டானது நிலைக்கத்தக்கதல்ல என்றும், அவ்வாறே உயர் நீதிமன்றம் உறுதி செய்தது சரியானதே என்றும் நாங்கள் கருதுகின்றோம். உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுடன் நாங்கள் உடன்படுகின்றோம்.எனினும், இவ்வழக்கானது, 2003-ஆம் ஆண்டிலிருந்து,

குற்றச்சாட்டு வனையும் நிலையிலேயே நிலுவையில் இருப்பதால், இத்தீர்ப்புரையை வழங்கிய நாளிலிருந்து 6 மாதங்களுக்குள்ளாக விசாரணையை முடிக்குமாறு, விசாரணை நீதிமன்றத்தைப் பணிப்பது உகந்ததென நாங்கள் கருதுகின்றோம்.இத்தீர்ப்புரையில் பதியப்பட்ட கருத்தறிவிப்புகள், இ.த.ச., பிரிவு 366-இன் பொருந்துகை குறித்தானவையே என்பதும், விசாரணை நீதிமன்றமானது, வழக்கைத் தகுதிக்கூறுகளின் அடிப்படையில் முடிவு செய்யவேண்டும் என்பதும் தெளிவு படுத்தப்படுகிறது.மேல்முறையீடானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.கே.சிக்ரி
மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர்.கே. அகர்வால்

புதுதில்லி

24.04.2018.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."